முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.190/2023**

**(LW-10) (PW -5)**

| பெயர் | சுதந்திரராஜ் | மதம் | **இந்து** |
|---|---|---|---|
| **த.பெ.** | கருப்பையன் | தொழில் | |
| ஊர் | கம்பன்கூடலூர் | வயது | 65 |
| மாவட்டம் | தேனி | தேதி | 13,11,2025 |

**இன்று (13.11.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**2 வது எதிரி ஆஜர் . 1 வது எதிரி ஆஜரில்லை . 317 மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சத்தியமாக சொல்கிறேன்**

**முதல் விசாரணை**

**நான் கடைசியாக திருநெல்வேலி நகரம் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து ஓய்வு பெற்று 2018 லிருந்து எனது சொந்த ஊரான கம்பன்கூடலூரில் வசித்து வருகிறேன் . நான் கடந்த 27.1.2012 ம் தேதி நான் கண்டமங்கலம் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது எங்கள் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த இறந்து போன திரு .சேகர் என்பவர் சேசாங்கனூரை சேர்ந்த ஜெகதீசன் மனைவி வாசுகி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் .54/2012 பிரிவுகள் 392, இதச படி பதிவு செய்திருந்த முதல் தகவல் அறிக்கைய நான் புல்ன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் அந்த முதல் தகவல் அறிக்ைக அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு முதல் தகவல் அறிக்யை பெற்று சம்பவ இடமான ஆண்டிப்பாளையம் கிருஷ்ணா ரெட்டியாரின் நிலத்திற்கு அருகே எதிரே உள்ள ரோட்டில் அவ்வழியாக வந்துகொண்டிருந்த சேசாங்கனூரைச் சேர்ந்த லட்சுமணன் மற்றும் தீனதயாளன் ஆகியோர் முன்னிலையில் இரவு சுமார் 22.30 மணிக்கு அங்கிருந்த மின் விளக்கு மற்றும் டார்ச் லைட் உதவியோடு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்ம் தயார் செய்தேன் . வரைபடம் அதசா.ஆ 6. பின்பு அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் புகார் தாரரான வாசுகி மற்றும் அவருடைய கணவர் ஜெகதீசன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் சம்பவம் நடக்கும் போது அருகே செங்கல் சூளையில் வேலை செய்துகொண்டிருந்த ஆண்டிபபாளையம் ஜெயபால் மற்றும் வாணிக்குப்பம் ஐய்யனார் ஆகியோர்களையும் விசாரணை செய்து வாககுமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என் முதல் விசாரணையை முடித்துக்கொண்டேன் . பின்பு 31.1.2012 ம் தேதி திண்டுக்கல் சரகத்திற்கு பணி மாறுதலாகி சென்றுவிட்டேன்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை நான் வாங்கினேனா என்றால் நான் நேரடியாக பெறவில்லை இறந்துபோன சிறப்பு உதவி ஆய்வாளர் திருசேகர் என்பவர் தான் பெற்றுள்ளார், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால்

சரியல்ல, சாட்சிகளுக்கு ஆஜர் முச்சலிக்கா எதாவது வழங்கினேனா என்றால் சம்பவ இடத்தில் இருநத் சாட்சிகளைத்தான் விசாரித்தேன் அதனால் ஆஜர்முச்சலிககா வழங்க வேண்டிய அவசியம் இல்லை, சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்த பிறகு எத்தனை மணிக்கு என்னிடம் வழக்கு கோப்புகளை ஒப்புவித்தார் என்றால் வழக்கு பதிவு செய்த கால் மணி நேரத்திலேயே ஒப்புவித்தார், புகார்தாரர் புகாரில் எதிரிகள் யார் என்று குறிப்பிட்டு பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான் ஆள் அடையாளம் தெரியும் என்று தான் குறிப்பிட்டுள்ளார், நான் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான், நான் புலன் விசாரணை செய்தபோது அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான், பார்வை மகசரில் குறிப்பிட்டுள்ள இடத்திறகு அருகில் உள்ள நில உரிமையாளர்கைள நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் நிலத்தின் உரிமையாளயர்களை விசாரிக்கவில்லைஇ அருகில் இருந்த செங்கல்சூளையில் இருந்த நபர்களை சாட்சியாக விசாரித்துள்ளேன், புகார்தாரர் புகாரில் நகையின் அடையாளம் ஏதாவது குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை, நான் சம்பவ இடம் சென்று சாட்சிகள் எதுவும் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரியல்ல, எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-.A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram